**செ.வெ. எண்: 044** **நாள்:21.01.2017**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் 18.1.2017 அன்று தலைமைச் செயலகத்தில், 2014ஆம் ஆண்டு நடைபெற்ற 17வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களின் பயிற்சியாளர்கள், சர்வதேச சதுரங்க கிராண்ட் மாஸ்டர் மற்றும் மாஸ்டர் பட்டங்கள் வென்றவர்கள், 2014ஆம் ஆண்டு நடைபெற்ற பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருக்கு 78 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், வெற்றி பெரும் விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், தமிழகத்தைச் சேர்ந்த திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கடந்த 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தென் கொரியாவில் நடைபெற்ற 17–வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் பயிற்றுநர்களான திரு. சங்கர் பாசு அவர்களுக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், திரு. சைரஸ் போன்ச்சா அவர்களுக்கு 24 லட்சம் ரூபாய், திரு. டி. ராமச்சந்திரன் அவர்களுக்கு 3 லட்சம் ரூபாய், என மொத்தம் 34 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான உயரிய ஊக்கத் தொகை;

2012–ஆம் ஆண்டிற்கான சர்வதேச சதுரங்க கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. எம். ஆர். வெங்கடேஷ் அவர்களுக்கு 5 லட்சம் ரூபாய், 2013–ம் ஆண்டிற்கான சர்வதேச சதுரங்க மாஸ்டர் பட்டம் வென்ற திரு. வி. ஏ. வி. ராஜேஷ் அவர்களுக்கு 3 லட்சம் ரூபாய், 2015–ஆம் ஆண்டிற்கான சர்வதேச சதுரங்க கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. அரவிந்த் சிதம்பரம் அவர்களுக்கு 5 லட்சம் ரூபாய், 2015–ஆம் ஆண்டிற்கான

சர்வதேச மகளிர் சதுரங்க மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி. பி. மிச்செல் காத்தெரினா மற்றும் செல்வி. எம். மஹாலஷ்மி ஆகியோருக்கு தலா 3 லட்சம் ரூபாய், என மொத்தம் 19 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை;

2014–ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடைபெற்ற பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் வட்டெறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு. கே. சாந்த முத்துவேல் அவர்களுக்கு 15 லட்சம் ரூபாய், ஜுடோ பெண்கள் குழுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை செல்வி ஆர். விஜயசாந்தி அவர்களுக்கு 10 லட்சம் ரூபாய், என மொத்தம் 25 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை;

என மொத்தம் 78 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்கள், சர்வதேச சதுரங்க கிராண்ட் மாஸ்டர் மற்றும் மாஸ்டர் பட்டங்கள் வென்றவர்கள், பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் வழங்கினார்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், “தென் கொரியாவில் நடைபெற்ற 17வது ஆசிய நாடுகள் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சர்வதேச சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று நமது நாட்டிற்கும், நமது மாநிலத்திற்கும் பெருமை சேர்த்துள்ள உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். நீங்கள் தொடர்ந்து சிறப்பான பயிற்சிகளை மேற்கொண்டு, மேலும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்று, நமது நாட்டிற்கும், மாநிலத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இன்றையதினம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை பெற்றுள்ள விளையாட்டுத் துறை பயிற்சியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மேலும் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி தமிழகத்திற்கும் நமது நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.” என்று வாழ்த்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களிடமிருந்து உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை பெற்றுக் கொண்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் தங்களை பாராட்டி காசோலைகள்

வழங்கி ஊக்குவித்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்:– 21.1.2017